**CC.NO. 33/2025** தேதி**: 11.03.2026**

**<u>அசா திருமதி. பகவதி சரணம் க/பெ சுரேஷ்குமார் நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. மது விலக்கு சம்மந்தமாக ரோந்து பணியில் இருந்தபோது ரகசிய தகவல் கிடைக்கபெற்று சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். ரகசிய தகவல் கிடைத்தபோது நான் ரோந்து பணியில் தான் இருந்தேன். சம்பவயிடமானது மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். தனி நபர் சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை என்றால் தனிநபர்கள் எவரும் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை. நான் யார் யாரை சம்பவயிடத்தில் சாட்சியாக இருக்க அழைத்தேன் என்றால் நான் சம்பவயிடத்தில் இருந்த நபர்களை அழைத்தேன். அவர்கள் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல இயலாது. வெள்ளைநிற சாக்குபையில் இருந்த தடயபொருள் 26 பாட்டில்களை கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றாலும், கைப்பற்றுதல் மகசரில் வெள்ளைநிற சாக்குபை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் தடயபொருள் கைப்பற்றியதாக சொல்லப்படும் நேரம் அடித்தல் திருத்தல் சொல்லப்பட்டுளளது என்றால் சரிதான். தவறுதலாக 8.45 மணி என்பதற்கு பதிலாக 7.45 என்று சொல்லியுள்ளதால் அதனை திருத்தம் செய்தேன். சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல்நிலைய புள்ளி விவரத்திற்காக வீட்டில் இருந்த எதிரியை விசாரணைக்காக அழைத்து சென்று பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த தடயபொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. இருப்பில் இருந்த பாட்டில்களை வைத்து எதிரி மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.